★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

# நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 15உ திங்கள் (30—7—56) ★ ★ வெளியூர்: ஆடி 16உ செவ்வாய் (31—7—56) [இதழ் 42

## பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குச் சலுகை: சென்னை சர்க்கார் விளக்கம்

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் பள்ளிகளில் அளிக்கப்படும் கட்டணச் சலுகை, அவர்கள் ஒரு வகுப்பில் (மூன்றாம் படிவம்வரையில்) ஓராண்டு தேறாவிட்டாலும் நீடித்து அனுபவிக்கலாம் என்றும் இரண்டாவது ஆண்டும் அந்த வகுப்பில் தேறாவிட்டால் தான் சலுகை ரத்து செய்யப்படுமென்றும் சர்க்கார் அறிவித்துள்ளனர்.

மீண்டும் அந்த மாணவன் அந்த வகுப்பில் தேறி மேல் வகுப்புக்கு வந்தவுடன் கட்டணச் சலுகை தொடர்ந்து அளிக்கப்படுமென்றும் சர்க்கார் விளக்கியுள்ளனர்.

# 'இருதலை கொண்ட இந்தியப் பேரரசு'

## 'விசைத்தறிகளினால் கைத்தறிகளுக்கு அழிவு நிச்சயம்'

## 'சிலர் வருமானம் உயரும்-பலர் பட்டினி கிடக்க நேரும்'

## 'விசைத்தறி ஆடைகளைப் பொதுமக்கள் வாங்கக் கூடாது'

## 'மக்கள் சக்தியை உருவாக்கி ஆட்சியைப் பணியவைக்க நெசவாளர் போராடவேண்டும்'

## விசைத்தறிபற்றி வினோபா விளக்கம்

ஓமலூர், ஜூலை 27—

"சேலம் நெசவாளர்கள், விசைத்தறிகளும், நூற்பு மில்களில் தானாக இயங்கும் தறிகளும் வேண்டாமென்று சொல்வது நியாயமேயாகும். காதி போர்டு தலைவர்கூட விசைத்தறிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இந்த எதிர்ப்பு முற்றிலும் தெளிவானதாகும். ஆனால் எதிர்ப்பு தெரிவிப்பது மட்டும் போதுமானதன்று; நெசவாளர்கள் எல்லோரும் ஒன்றுபட வேண்டும்; அவர்களுடன் குடியானவப் பெருமக்களும் ஒன்று சேர்ந்து பலமான கோட்டையை உருவாக்கவேண்டும்; 'விசைத் தறியால் நெய்யப்பட்ட துணியை வாங்கமாட்டோம்' என்று உறுதிமொழி எடுத்துக்கொள்ளுமாறு முயற்சிக்க வேண்டும்; அகில இந்திய அனுதாபத்தையும், பொதுமக்களின் அனுதாபத்தையும் சேலம் நெசவாளர்கள் பெற்று, மக்கள் சக்தியின் தன்மையை முழு அளவிற்குக் காட்ட வேண்டும்; மக்களின் சக்தியை சர்க்கார் அலட்சியப்படுத்த முடியாது.

"இன்றைய சர்க்கார், தனக்கு இரு தலைகள் இருப்பதுபோல் நடந்துகொள்கிறது; சிந்தனை, பேச்சு, நடத்தை ஆகியவற்றில் இருமனப்போக்காக நடந்துகொள்கிறது; 'அதிகத் துணி உற்பத்தி செய்யவேண்டும்' என்ற கோரிக்கையின் மீது, ஒரு தலை, அம்பர் சர்க்காவை ஆதரிக்கிறது; மற்றொரு தலை, விசைத்தறிகள் விஸ்தரிப்பை ஆதரிக்கிறது"

என்று, ஆச்சாரியா வினோபா பாவே அவர்கள், சேலத்திலிருந்து பத்து மைல் தொலைவிலுள்ள ஓமலூரில், கூட்டமொன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் சொன்னார்:—

"சர்க்கார் உதவியின்றி கைத்தறித் தொழில் ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பிழைத்து வந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியின்போது சர்க்காரால் புறக்கணிக்கப்பட்ட போதிலும், நெசவுத் தொழில் வாழ்ந்தே வந்திருக்கிறது; நவீன இயந்திரப் போட்டியில் இதர குடிசைத் தொழில்கள் நசிந்துவிட்டபோதிலும், நெசவுத் தொழில், தன்னால் இயன்ற வரை நன்றாக நடந்து வந்திருக்கிறது.

"தலைமுறை தலைமுறையாக இந்தத் தொழில் நீடித்து வந்திருக்கிறது. ஆண்களுக்கு உதவியாகப் பெண்கள் இத்தொழிலில் இருந்து வருகின்றனர்.

"கைத்தறி நெசவாளர்கள் விசைத்தறிகளுடன் போட்டி போட முடியாது. சில நெசவாளர்கள் அதிக வேலையும் வருமானமும் பெறலாம்; ஆனால் கைத்தறிகளை நம்பியிருக்கும் பெரும்பான்மையான நெசவாளர்கள் நசிந்து, பட்டினி கிடக்க நேரிடும்.

"பொதுமக்களும் நெசவாளர்களுக்கு ஆதரவு தரவேண்டும்; விசைத்தறிகளால் நெய்யப்படும் துணியை உபயோகிக்காமலிருக்க ஒப்புக்கொள்ள வேண்டும்.

"அதிக துணி உற்பத்திக்கு வகைசெய்யும் பொருட்டு விசைத் தறிகளுக்கு ஊக்கம் அளிப்பதின்மூலம் இலட்சக்கணக்கான நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு, வேலை இழக்க நேரிடும் என்பதை சர்க்கார் மறந்துவிடுகின்றனர்.

"எந்த சர்க்காரும் தவறு செய்யாமல் இருப்பதில்லை; எப்பொழுதும் சரியாக இருந்ததுமில்லை; சர்க்கார் தவறுகள் செய்யக்கூடும்; ஆனால், பொது மக்களின் பலம் பொருந்திய கருத்தையும், அதற்குப் பின்னணியாக உள்ள மக்களின் சக்தியையும் எந்த சர்க்காரும் புறக்கணிக்க முடியாது.

"சர்க்கார் ஆரம்பிக்கும் நல்ல விஷயங்கள்கூட பொதுமக்கள் ஒத்துழைப்பின்றி வெற்றி பெற இயலாது. எனவே, மக்களின் ஒருமித்த கோரிக்கை — சர்க்கார் 'ஒருதலை'யுடன் நடக்கவும், சொல்லிலும் செயலிலும் குழப்பத்தையும் முரண்பாட்டையும் உண்டாக்கிக் கொண்டிருக்கும் மற்றொரு தலையை விட்டுவிடவும் உதவிபுரியும்.

"ஒரு சிலர் அதிகம் சம்பாதிக்கவும், மற்றவர்கள் உணவின்றி இருப்பதும் இனி பயனில்லை."

### அவசியத்திற்குமேல் ஒரு நிமிடம்கூட!

### ஷேக்அப்துல்லா காவலில் இருக்கமாட்டாராம்

"ஷேக் அப்துல்லா விடுதலை இனி அரசியல் பிரச்சினையல்ல; பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்; அவசியத்திற்குமேல் ஒருநிமிடம்கூட அவர் காவலில் இருக்கமாட்டார்," என்று காஷ்மீர் தலைமை அமைச்சர் கூறியதாக செய்தி ஒன்றின்மூலம் தெரிகிறது

## பிரயாணச் செலவை மறுக்கும் அநீதியை எதிர்த்து அறப்போர்

### முதல் தேதி சம்பளம் வாங்க மறுப்பு

### மீனம்பாக்கம் ஆர். எம். எஸ். ஊழியர்களின் புதிய போர்முறை

"வழக்கமாக வாங்கி வருவதுபோல், எங்களுடைய மாதச் சம்பளத்தை 1—8—56-ல் வாங்கிக் கொள்ளப் போவதில்லை"

"மீனம்பாக்கம் விமான நிலைய அஞ்சல் பிரிக்கும் அலுவலகத்தில் பணிபுரியும் ஆர். எம். எஸ். ஊழியர்கள், பூங்கா நகரில் இருக்கும் சென்னை அஞ்சல் பிரிக்கும் தலைமை நிலையத்திற்குச் சென்று மீனம்பாக்கம் செல்வதற்குரிய பிரயாணச் செலவைக் கோரப் போகிறார்கள்."

இவ்வாறு, அறப்போர் முறைகளை மேற்கொள்ள இறுதியாக முடிவு செய்திருப்பதாக, மேற்படி ஊழியர் சங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது.

இவ்வகையில், மீனம்பாக்கம் ஆர். எம். எஸ். ஊழியர்களுக்குக் கொடுத்துவந்த போக்குவரத்துச் செலவை, எதிர்பாராத வகையில் கொடுக்கமறுத்துவிட்டதின் காரணமாக, இத்திங்கள் (2-7-56-ல்) தங்கள் சம்பளத்தை வாங்க மறுத்து, மேற்படி சென்னை ஆர். எம். எஸ். பிரிவு ஊழியர்கள் கிளர்ச்சிசெய்தனர். தங்கள் கோரிக்கையின் நியாயத்தை சென்னை அஞ்சல்தலைமை அதிகாரியும் புதுடில்லியில் உள்ள உயர்தர அதிகாரியும் ஒப்புக்கொண்டு இருந்தும்கூட, ஊழியர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படாது இருக்கிறது. எனவே, எப்படியும் மேற்படி இருமுறைகளை மேற்கொள்ளுவது என ஆர். எம். எஸ். ஊழியர்கள் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

## 'வடநாட்டு ஆதிக்கம் ஒழிக' என முழங்க எங்களுக்கு உரிமை உண்டு

## 'தமிழ் ஏன் பொதுமொழியாக இருக்கக் கூடாது? எனக் கேட்கவும் உரிமை உண்டு'

### வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பக ஆண்டு விழாவில் ஆட்சியாளருக்கு ஆசைத்தம்பி அறைகூவல்

"பம்பாய் நகரம் மராட்டியத்தோடு சேர்க்கப்படவில்லை என்ற காரணத்திற்காகப் பண்டித நேருவின் சர்வாதிகார மனப்பான்மையையும், நடவடிக்கைகளையும் பாராளு மன்றத்தில் எடுத்துக்கூறி சில ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிய சி. டி. தேஷ்முக் தனது நிதி அமைச்சர் பதவியை இராஜிநாமாச் செய்தார்—மராட்டிய இன உணர்வு காரணமாக! ஆனால், ரூ. 1,500 மட்டுமே சம்பளம் வாங்குகிற நமது முதலமைச்சர் காமராசர், தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் நியாயமான முறையில் தமிழகத்தோடு சேர்க்கப்படாமலிருப்பதைக் கண்டிக்க தனது பதவியை ஏன் இராஜிநாமா செய்யக்கூடாது?

"காங்கிரசுக்காரர் என்பதை பிறகு வைத்துக்கொண்டு, மராட்டியன் என்பதை முதலாவதாக வற்புறுத்தி, என். வி. காட்கில் பேசுகிறாரே! தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் பற்றித் தமிழன் என்ற இன உணர்வோடு ஏன் பேசக் கூடாது சுப்பிரமணியம்....?"

என்று சென்னை—வண்ணையம்பதி கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக 4-வது ஆண்டு விழாவில் பேசுகையில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி குறிப்பிட்டார்.

29—7—56 அன்று, மணிகண்ட முதலி தெருவில், பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக நான்காவது ஆண்டு விழா தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், மாணவி எஸ் பி. சற்குணம், தோழர்கள் மு. பெருமாள், ப புகழேந்தி, சி ஆர். பாலசுந்தரம் ஆகியோர் பேசினர்.

தோழர் ஆசைத்தம்பி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரஸ்காரர்களால் படுகொலை செய்யப்பட்ட தோழர் கே. எஸ். பாண்டியன் அவர்களின் பெயரால் நடைபெறும் இந்தப் படிப்பகத்தின் ஆண்டு விழாவில் பேசுவதில் உண்மையில் மகிழ்ச்சியடைகிறேன். மாவீரர்கள் பாண்டியன், மஜீத், உடையார்பாளையம் வேலாயுதம் ஆகியவர்களின் மறைவுகளெல்லாம், அரசியலில் 'ரௌடிசம்' இருக்கும்வரை படுகொலைகள் இருந்தேதீரும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றன. அத்தகைய 'புனிதமான' ரௌடித்தனத்தைக் கையாளுகிற காங்கிரஸ் கோமான்களை நம்மைவிட மிக அருமையான முறையில் எடைபோட்டு சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சோமசுந்தரம் குறிப்பிட்டார்—கரூரில் நாடக சம்பந்தமான வழக்கொன்றில் தீர்ப்பு வழங்கும்போது, 'காங்கிரஸ் ரௌடிகள்' என்று! எனவே, நம்மைப்பார்த்து 'ரௌடி'கள் என்று குறிப்பிடுகிற காமராசருக்கு, நாம் அந்த நீதிபதியின் 'சர்டிபிகேட்'டை அர்ப்பணம் செய்கிறோம்—'யார் ரௌடி என்பதை அவரே முடிவு செய்து கொள்ளட்டும்' என்று!

"நாட்டில் நாம் மிக வலிவுள்ள இயக்கமாக வளர்ந்துள்ளோம்; பட்டிதொட்டிகளெல்லாம் நமது பாசறைகளாகியுள்ளன; நாம் எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் ஆதரவு வந்துகொண்டிருக்கிறது. பொது மக்கள் நம்முடைய கூட்டங்களில் ஏராளமாகக் கூடுகிறார்கள். இது அவர்களுக்குப் பொறுமையையும் வயிற்றெரிச்சலையும் தருகிறது.

"'தீர்த்துக் கட்டுங்கள்' — 'ஒரு கை பார்க்கிறேன்' என்கிறார்கள். அதன் எதிரொலிதான் பாண்டி...

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 30—7—'56 திங்கள்

# பிச்சைக்காரர் பிரச்சினை!

★

“ ‘பிச்சை கேட்பது தவறல்ல—கொடுப்பதுதான் தவறு; கொடுப்பதால்தானே வாங்குவோர் வளருகிறுர்கள்; கொடுக்காவிட்டால்........? எனவே, பிச்சைக்காரர் தொல்லையை ஒழிக்க பிச்சை கொடுப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும்’ என்று உபதேசித்துக் கொண்டே, அந்த உபதேசத்தைக் கடைப்பிடிக்க முடியாத இக்கட்டான கட்டங்கள் வரும்போது, மனம் இளகிவிடுகிற பலகீனமுடையவன் நான்,”

என்று, தன்னைப் பற்றி ஆலிவர் கோல்ட் ஸ்மித் எனும் ஆங்கில இலக்கிய மேதை கட்டுரை ஒன்றில் எழுதியிருக்கிறுர்.

‘பிச்சை எடுப்பது தவறு—அல்லது, பிச்சை கொடுப்பது தவறு’—என்ற சர்ச்சைக்கு, ஆழ்ந்து சிந்தித்தால், அந்தக் கருத்து பிரகாசமான விளக்கம் தரக்கூடியதாகும். ஆனல், பிச்சை எடுப்பதோ, அல்லது பிச்சை கொடுப்பதோ ஒரு சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான வாழ்வைப் பொறுத்த விஷயங்கள் என்பது மட்டும் கூறுமலே தெரிந்து கொள்ளக்கூடிய உண்மையாகும்.

பிச்சைக்காரர்கள், சமுதாயத்தின் அலங்கோலமான அடிப்படைக் கோளாறுகள் மிகுந்த அமைப்பினுல் உருவாக்கப்பட்டிருக்கிறுர்கள், பிச்சை எடுக்கவேண்டிய அவல[illegible]க்கு, சமுதாயம் சிலரைத் து[illegible]றது.

கூன், குருடு, செவிடு, முடம் போன்ற ஊனங்கள் கொண்டோர், சமுதாயத்தினுல் பாதுகாப்பான வாழ்வு தரப்படாமையால் பிச்சை எடுத்து வாழ வேண்டியவர்களாகின்றனர். சந்தர்ப்பங்களால் அனுதைகளாக்கப்படுவோரும், அதே காரணத்தினுல் இந்தத் ‘தொழிலே’ மேற்கொண்டுவிடுகின்றனர்.

மற்றும், ‘உலகே மாயம்’ என்பன போன்ற பாழாகிப் போன மதத் தத்துவங்களுக்கு அடிமைப்பட்டுக்கிடக்கும் ஒரு சமுதாயம், ‘சாது’க்கள் என்ற பெயரில் உழைத்து வாழ விரும்பாத சில சோம்பேறிகளை ஊரார் ஊட்டுதலிலேயே கொழுத்து வளருவதற்குப் பயபக்தியோடு அனுமதியும் அளித்திருக்கிறது. இதன் விளைவு, இரக்கம் என்ற உணர்ச்சி சுரக்கும் உள்ளங்களால்—சமுதாயத்தின் ஒரு பகுதி, தொல்லைகளைப் பிறருக்குத் தந்துகொண்டும், தானே தாங்கிக்கொண்டும் வாழ நேரிடுகிறது. இந்த மாயையான உலகத்தில் மனிதன் புரியும் எண்ணற்ற பாவங்களுக்கு விமோசனம் அளிக்க வல்லதும், இந்த இரக்க உணர்வு என்ற நம்பிக்கையும் பலரது உள்ளத்தில் ஊடாடிக் கிடக்கிறது.

இந்தச் சமுதாயத்தின் மிகப் பெரும்பான்மையினரால், பிறர் கஷ்டத்தில் பங்கு கொள்ளுவது—பிறருக்குத் துன்பம் நேர்ந்தபோது தான் அந்தத் துன்பத்தைத் தவிர்க்க உதவ வேண்டியது, ‘இரக்கம்’ காட்ட வேண்டியது — இயற்கையாகவே தோன்றுகிற மனிதாபிமானம், பண்பு என்ற பொருளில், ‘இரக்கம்’ புரிந்து கொள்ளப்படுவதற்கு மாறுக, ‘இரக்கம் காட்டுவது, தனது பாப விமோசனத்திற்கு’ — என்ற சுயநல நோக்கத்தோடு புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

‘இரந்தும் உயிர்வாழவேண்டிய நிலை’ இந்தச் சமுதாயத்தில் சிலருக்கு ஏற்பட்டிருப்பதால்தான், ‘ஈகை நன்றே’ என்ற பழமொழி பிறக்க முடிந்திருக்கிறது.

இரந்து உயிர்வாழும் நிலை ஏன் ஒரு சமுதாயத்திற்கு ஏற்பட்டது என்பதைக் கண்டாலன்றி, இரந்துவாழும் பிச்சைக்காரர் பிரச்சினைக்கு, நிரந்தரமான பரிகாரம் தேடிட முடியாது.

சாதுக்கள் என்ற பெயரில், இந்தத் தலைமுறையில் உலவிக் கொண்டிருக்கும் ‘கோயில் மாடு’களை இழுத்துவந்து, பட்டி ஒன்றில் அடைத்து, ஏதேனும் வேலை வாங்குவதினுல் மட்டுமே சாதுக்கள் தோன்றுமலிருந்து விடுவார்களா என்றுல், இல்லை. ‘சாது’க்களாக வாழ்பவர்களை, வாழ்விக்க வைக்கும் சமுதாயத்தில் புரட்சிகரமானதோர் மனமாற்றம் ஏற்பட்டாலன்றி, வரப்போகும் கணக்கில்லாத தலைமுறைகளிலும் சாதுக்கள் தோன்றி, பிரச்சினைகளைத் தோற்றுவித்துக்கொண்டுதானிருப்பர்!

அதேபோலவே, கொடிய வறுமை, பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம், அபாயகரமான சந்தர்ப்பங்கள், அங்கஹீனம் இவை எல்லாம் தோற்றுவித்திருக்கிற பிச்சைக்காரர்களை எல்லாம் கூட்டிச் சென்று, விடுதிகளில் அடைத்து, வேலையும் வாழ்வும் தந்துவிட்டால் மட்டும் போதுமானதல்ல; இன்று, பிச்சைக்காரர்களாக இருப்போருக்கு வாழ்வு தருவதுமட்டும் போதுமா? நாளை பிச்சைக்காரர்களாகப், பலர் சமுதாயத்தில் மாறிவிடக் கூடிய ஸ்திரமற்ற வாழ்க்கை நிலை நிலவுகிறதே! நாளையும பிச்சைக்காரர்களைப் பெற்றெடுத்துத் தரும் சமூக அமைப்பு நீடித்துக்கொண்டிருந்தால் பிச்சைக்காரர்களும், அவர்கள் கிளப்பும் தொல்லைகளும் இல்லாதொழியச் செய்வது எப்படி?

சமுதாயத்தின் அடிப்படையில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டாலன்றி—எல்லோருக்கும் தொழில், வேலை, பாதுகாப்பான வாழ்வு என்ற உயரிய நிலை மலர்ந்தாலன்றி, ‘பிச்சைக்காரர் விடுதி’ திறந்துவிடுவது மட்டும் பிரச்சினைக்குப் பரிகாரமாகிவிடாது.

அந்த உயரியநிலை, தமிழகத்தில் என்று மலரும்?

# ‘தேஷ்முக் பதவி விலகல் பலரை பதவியிலிருந்து தூரத்துவதாகும்’

## ‘குறுகிய மனப்பான்மையால் தேஷ்முக்கை இழந்தது கண்டனத்திற்குரியதாகும்’

### ,மக்கள் கருத்துப்படி அரசாங்கம் இயங்க வேண்டுமா? அல்லது அரசாங்கத்திற்கு மக்கள் அடிபணிய வேண்டுமா ?’

“ உற்று கவனிக்குமிடத்து, தேசமுக்கின் பதவி விலகலை காங்கிரசு மேலிடத்தார் விருப்பத்துடன் வரவேற்றிருப்பார்கள் என்று நினைப்பதற்கு இடமிருக்கிறது. ஏனென்றுல், சில முக்கியமான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைக் குறித்து, காங்கிரசு மேலிடத் தலைவர்களுக்கும், நிதி அமைச்சருக்கும் கருத்து வேறுபாடு இருந்து வந்தது.

“ இந்தியாவிலுள்ள குறைந்த நிதி வசதிகளைச் சிறப்பான முறையில் பயன்படுத்த வேண்டுமேயல்லாது, வீண் விரயமாக்கக்கூடாது என்பது நிதி அமைச்சருடைய கொள்கை. ஆனுல், கட்சிக் கொள்கைகளாகிய கதர், அம்பர் கைராட்டினம் முதலிய பயனற்ற திட்டங்களுக்குக் கொடுக்கப்படும் பொருள் வீண் விரயமானுலும், அதைப் பற்றிக் கவலையில்லை என்பது காங்கிரசு மேலிடத் தலைவர்களுடைய பிடிவாதமான மனப்பான்மை.

“ இக்கருத்து வேறுபாட்டினுல் ஏற்பட்ட வாத—எதிர்வாதங்கள் அமைச்சரவையின் தரத்தைத் தாண்டி, பொதுமேடைப் போர் அரங்கிலும் மக்கள் கவனத்தைக் கவர்ந்தது. ஆகையால், தம்முடைய கட்சியின் வீண் விரயக் கொள்கைத் திட்டங்களுக்கு அடிக்கடி இடையூறுக விளங்கி வந்த நிதி அமைச்சர் பதவி விலகுவதை, காங்கிரசு மேலிடத்தார் வரவேற்றிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

“ இனிமேல், எத்தகையத் தடையுமில்லாமல், பொது நிதிகளைக் கட்சி நலக் கொள்கைத் திட்டங்களுக்கு அவர்கள் எளிதாகப் பயன்படுத்தலாமல்லவா? ஆனுல், தேசமுக்கின் பதவி விலகல், இவை எல்லாவற்றையும்விட ஒரு மாபெரும் பொதுச் சிக்கலை எழுப்பியிருக்கிறது.

“ சுதந்திர இந்தியாவில், மக்கள் கருத்தின்படி அரசாங்கம் இயங்க வேண்டுமா? அல்லது அரசாங்கத்தின் வல்லாட்சிக் கொள்கைக்கு மக்கள் அடிபணிய வேண்டுமா? என்பதே அச்சிக்கலாகும்.

“ மக்கள் கருத்தின் மேம்பாட்டை நிலை நிறுத்துவதற்கே, தேசமுக், தம்முடைய பெரும் பதவியைப் புறக்கணித்தார். அவருடைய பெருந்தன்மையான செயலையும், நல்லரசியல் பண்பையும் நாம் பெரிதும் பாராட்டுகின்றேம்.

“ பதவியிலிருந்து விலகுவது அவருக்கு நட்டமல்ல; இதனுல் நாட்டிற்கு ஏற்பட்ட நட்டம் மிகப் பெரிதாகும்.

“ இந்திய அமைச்சரவையில் தலைவர்கள் பலர் இருக்கிறுர்கள்; ஆனுல் நிபுணர்கள் மிக மிகக் குறைவு. அதுவும், பொருளாதாரத் துறையிலும், நிதித் துறையிலும் ஒருங்கே நிபுணத்துவம் பெற்றவர்கள் ஒருவருமே இல்லை என்று கூறலாம். தேசமுக், இவ்விரு துறைகளிலும் சிறப்பான ஆற்றலும் நீண்டகால அனுபவமும் பெற்றவர். ஏறத் தாழ முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிர்வாகத் திறமையும், அனுபவமுமுள்ள தேஷ்முக்கின் சேவை, இனிமேல் நாட்டிற்குப் பயன்படாமல் செய்தது வருந்தத்தக்கதாகும்.

“ஒரு குறுகிய மனப்பான்மையின் காரணமாக, அவருடைய சேவையை நாடு இழக்கும்படி செய்த காங்கிரசு மேலிடத் தலைவர்களின் போக்கு மக்களின் வன்மையான கண்டனத்திற்குரியதாகும்.

“நிதி அமைச்சரின் பதவி விலகலால் சிக்கல் தீர்ந்துவிட்டது என்று மேலிடத் தலைவர்கள் நினைத்துவிடக் கூடாது. எந்தச் சிக்கல் அவருடைய பதவி விலகலுக்குக் காரணமாக இருக்கிறதோ, அதே சிக்கல் மேலிடத் தலைவர்களின் மன அமைதிக்கு இடையூறுக இருந்து கொண்டேயிருக்கும் என்று திட்டமாகக் கூறலாம்.

‘இங்கிலையில், அரசாங்க இராணுவ வலிமையாலும், ஊர்க் காப்பாளர்களின் படை உதவியாலும், மக்கள் கருத்தை அடக்கி ஒடுக்க அரசினர் முற்படலாம். அம் முயற்சி நீண்டகால வெற்றி பெறுவது மிகவும் கடினம் என்பதை அரசினர் உணர வேண்டும். ஒருவர் பதவி விலகியதால் ஏற்பட்ட நிலைமை, பலர் பதவிவிலக வேண்டிய நிலைமைக்குக் கொண்டுபோய்விடும் என்று அவர்கள் பின்னர் உணருவார்கள்.

இவ்வாறு, 26—7—56 ‘தமிழ் நாடு’ இதழ், ‘முடிவுருத சிக்கல்’ என்ற தலைப்பில் தீட்டியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

# சொல்வதைச் செய்வாரா நேரு?

## காஷ்மீர் சிக்கல் குறித்து இங்கிலாந்து மக்கள் சபையில் கேள்வி

இலண்டன், ஜூலை 28—“ இந்தியப் பிரதமர் நேரு, தாம் சொல்வதைச் செயலில் காட்டி உதாரணமாக விளங்குவதற்கு காஷ்மீர் சிக்கல் ஓர் சரியான பிரச்சினையாகும்; அச்சிக்கலைத் தீர்ப்பதற்கு மற்ற எவரையும்விட நேருவுக்கும்—இந்திய அரசாங்கத்திற்குமே அதிக வாய்ப்பு இருக்கிறது ”

என்று, பிரிட்டன் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையில், கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த எப். எம். பென்னெட் கூறியுள்ளார்.

‘காஷ்மீர் தகராறு நீடிப்பதால் போர் ஏற்படக்கூடிய மற்றொரு இடமாக காஷ்மீர் இருக்கிறது’ என்று தாம் கருதுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் அவர் சொன்னுர்:—

“ காஷ்மீரில், செயற்கை முறையில் ஏற்படுத்தப்பட்ட எல்லையை நிலைநாட்ட இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் வளங்கள் பெரும் அளவு வீணுக்கப்படுகிறது

“ காஷ்மீர் முன்னுள் முதலமைச்சர் ஷேக் அப்துல்லா, கடந்த மூன்றுண்டுகளாக எவ்வித விசாரணையும் நடத்தப்படாமல் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருப்பது எத்தனை பேர்களுக்குத் தெரியும்?

“ இவ்விவகாரத்தினுல் எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்று காரணம் காட்டி இதைக் கவனிக்காமல் இருந்துவிடக்கூடாது; காஷ்மீர் சிக்கல் மீண்டும் ஐ நா. கூட்டத்தில் எழுப்பப்படும் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது; இச்சிக்கல் சம்பந்தமாக உடன்பாடு ஏற்படுத்துவதற்குப் பாதுகாப்புக் குழு மூலம் மன உறுதியுடன் முயற்சி செய்ய வேண்டும்.”

# நெய்வேலித் திட்டம்!

## ‘எஞ்சினியரிங்’ தொழிலுக்கு ஒரு அறைகூவல்!

### அமெரிக்க நிபுணர் கருத்து

சென்னை, ஜூலை 28—“ நெய்வேலி நிலக்கரி சுரங்கத் திட்டம், எஞ்சினியரிங் தொழிலுக்கு ஓர் அறைகூவலாகும்,” என்று, அமெரிக்கச் சுரங்கத் தொழில் நிபுணர் ஒருவர் கூறிவிட்டு, மேலும் சொன்னுர்:—

“ சுரங்கத்தில், நிலக்கரி படிவைக்குக்கீழ், பொங்கிவரும் நீரூற்றுகள் இருக்கின்றன; இதுபோன்றதோர் அமைப்பு காணப்படுவது, சுரங்கத் தொழிலிலேயே இதுதான் முதல் முறையாகும். தக்க தடுப்பு முறையைக் கையாண்டு தண்ணீர் அபாயம் தடுக்கப்படுவதும் ஒழுங்கான திட்ட முன்னேற்ற முறைகள் வகுக்கப்படுவதும் அதிக அவசிய மாகும்.”

நெய்வேலி நிலக்கரித் திட்டம் தென்னுற்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது; இத்திட்டத்திற்கு ரூ. 60 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

## நெய்வேலி திட்டத்திற்கு கருவிச் சாதனங்கள்

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டத்திற்கு வேண்டிய இயந்திரக் கருவிச் சாதனங்களைப் பெறுவதற்கு ரூ. 1-கோடிக்கு மத்திய சர்க்கார் ‘ஆர்டர்’ கொடுத்திருக்கிறுர்களெனச் செய்தி ஒன்று கூறுகிறது.

# பெயரளவில்தான்

## தலைவராக இருக்கிறுராம்!

உருது வாரப் பத்திரிகை ஒன்றுக்கு எழுதியுள்ள கட்டுரையொன்றில், ஐதராபாத் அரசப்பிரமுகர் குறிப்பிட்டதாவது:—

“35 ஆண்டுகளாக அரசாட்சி செலுத்தியபொழுது இருந்த நிலையில் நான் இப்பொழுது இல்லை; பெயரளவில்தான் தலைவராக இருக்கிறேன்; எவ்வித அதிகாரமும் இல்லை; சொந்தச் சொத்துக்களின் நிலைமையும் திருப்தியாக இல்லை; இவ்வித நிலையில், பொது நிறுவனங்களுக்கு நன்கொடை அளிக்கவோ, அது சம்பந்தமாகப் பொறுப்பேற்றுக் கொள்ளவோ நான் விரும்பவில்லை,”

# அலகாபாத்தில் 3,000 கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தம்

## விடுமுறை நாட்களை அதிகரிக்கக் கோரி நடவடிக்கை

### இரு மாணவிகளுக்குத் தண்டனை

அகமதாபாத், ஜூலை, 26—

ஆனந்த் எனுமிடத்திற்கருகில் புதிதாக உருவாகியுள்ள வல்லபா நகரில் உள்ள கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 3,000 மாணவர்கள், கல்லூரிகளில் விடுமுறை நாட்களைக் குறைத்து பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினை எதிர்த்து கடந்த மூன்று நாட்களாக வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர் என்று தெரியவருகிறது.

கல்லூரிகளில், வேலை நாட்களை 210-ஆக நிர்வாகிகள் உயர்த்தியுள்ளதை எதிர்த்தே மாணவர்கள் இக்கிளர்ச்சியிலீடுபட்டிருப்பதாக சர்தார் வல்லபாய் பட்டேல் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான பாய் லால்பாய் படேல் தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஜூலை 19-ந் தேதி நபிகள் தினத்தன்றும், 23-ந் தேதி திலகர் தினத்தன்றும் மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லாமல், அந்த இரு நாட்களும் விடுமுறை நாட்களாக இருக்க வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர் என்றும், இந்த ஆர்ப்பாட்டங்களின் போது கல்லூரிக் கட்டிடங்களைக் கல்கொண்டு தாக்கி சேதம் விளைவித்தனர் என்றும் துணைவேந்தர் கூறியிருக்கிறார்.

கல்லூரி மீது கல்லெறிந்த ஒரு மாணவியும், கல்லூரி வாயிலில் மறியல் செய்த ஒரு மாணவியும் கல்லூரியிலிருந்து தகுந்த அறிவிப்பு வரும்வரையில் நீக்கிவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# உயர்நிலைக் கல்வித் திட்டத்தில் மாறுதல்

### ஆந்திர சர்க்கார் பரிசீலனை

நீடுப்ரோலு, ஜூலை 27—

"தெலுங்குப் பாடத்தில் மாணவர்கள் தேறுவது கடினமாக இருக்கிறது என்ற காரணத்தால், உயர்நிலைக் கல்வித் திட்டத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்வது குறித்து சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது,"

என்று ஆந்திர முதன் மந்திரி பி. கோபால ரெட்டி இங்கு கூறியிருக்கிறார்.

# பொதுத் தேர்தல்

### சில குறிப்புகள்

சென்னை, ஜூலை 28—

அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலையொட்டிய வாக்காளர் பட்டியல், வரும் அக்டோபர் 1-ந் தேதிக்குள் பிரசுரமாகிவிடுமாம்.

வாக்காளர்கள் மூன்று மைல்களுக்கு அதிகமாக நடக்கக்கூடாது என்ற கொள்கை பின்பற்றப்படுமாம்; ஆனால், மலைப்பிரதேசப் பகுதிகள் மட்டும் இதற்கு விதிவிலக்காம்.

தற்போதுள்ள 39 ரிசர்வ் இடங்கள் 40-ஆக அதிகரிக்கப்படுமாம்.

பொதுத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாநிலத்தில் துரிதமான நடவடிக்கைகள் இப்போதே மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம்.

## கலந்து ஆலோசிக்குமாம்!

பொதுத் தேர்தலில் குறிபோடும் முறையை அமுல் செய்வது சம்பந்தமாக சென்னை சர்க்காரையும் அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளையும் தேர்தல் கமிஷன் விரைவில் கலந்து ஆலோசிக்குமென தெரியவருகிறது.

## நன்றி அறிவிப்பு

14—7—56-ல் கோகலே மண்டபத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற எங்கள் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு வந்திருந்தும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியும், பரிசுகளை வழங்கியும் எங்களை மகிழ்வித்த அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்.

ஏ. கே. வில்வம்
துணையாசிரியர் 'முரசொலி'

அருண்மொழி
பி. ஓ. எல்.

# ரஷ்ய விவசாய இலாகா பொறுப்பாளர் மீது குருஷ்சேவ் பாய்ச்சல்

## இயந்திர உற்பத்தித் துறையினர் மீதும் குற்றச்சாட்டுகள்

'அதிக உணவு உற்பத்திக்குக் குந்தகம் விளைவிக்கிறார்கள்' என்ற குற்றம் சாட்டி ரஷ்ய விவசாயத் துறையுடன் தொடர்புகொண்ட அமைச்சர்கள், அமைச்சர் அலுவலகங்கள், அரசாங்கக் கூட்டுப் பண்ணைகள் ஆகியவற்றின் அதிகாரிகள் முதலானோரை, குருஷ்சேவ், கடுமையாகக் குறைகூறினாராம்.

தகுதியான இயந்திரங்களை உற்பத்தி செய்வதில் தவறிவிட்டதாக டிராக்டர்—இயந்திர விவசாய உற்பத்தித் துறை அமைச்சர்மீது குருஷ்சேவ் குற்றம் கூறினர்.

"அறுவடைகள் தனித்தனியாக நடக்கவேண்டும்—என்று, பொதுவுடைமைக் கட்சியும்—மாநாடும் முடிவு செய்தன; தனித்தனியான இயந்திரங்கள் செய்வதற்கு புது வகையான இயந்திரங்கள்தேவை; இது, அத்துறை அமைச்சருக்குத் தெரியாததல்ல; சென்ற ஜனவரியிலேயே இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது; ஆனால் இன்று வரையில் அம்முடிவை அமுலுக்குக் கொண்டுவர எதுவும் நடைபெறவில்லை; பெரிய இயந்திரங்கள் வெளிவருவதற்குள் ஓராண்டின் உழைப்பு வீணுவதுடன், இலட்சக்கணக்கான 'ரூபின்' (ரஷ்ய நாணயம்) களும், விலையுயர்ந்த பொருள்களும் நாசமாகிவிடும் என்று அவர் குறிப்பிட்டார்.

# விதவை மறுமணச் சட்ட நூற்றாண்டு விழா

## குஜராத்தில் 1200 விதவைகள் மறுமணம் புரிந்துகொண்டனர்

அகமதாபாத், ஜூலை 26—

"நூறு ஆண்டுகளுக்கு முன் விதவை மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து, குஜராத்தில் சுமார் 1,200 விதவைகள், சமூகக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து மறுமணம் புரிந்துகொண்டிருக்கின்றனர்,"

என்று, குஜராத் சன்சார் சுதாரா மண்டலின் (சமூக சீர்திருத்த நிறுவனம்) தலைவரான கதுபாய் துருவ என்பார் கூறியிருக்கிறார்.

விதவை மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக, நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அப்போது, குஜராத்தில் உள்ள பல்வேறு சமூகசேவா நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் ஆதரவில் சுமார் 900 விதவை மறுமணங்கள் நடைபெற்றிருப்பதாகவும் கூறினார்கள்.

அதுபோது துருவா அவர்கள் இதவன்ஜியில் சுமார் 300 திருமணங்களும் நடைபெற்றிருக்கலாம் என்றும் கணக்குக்கூறியிருக்கிறார்.

# மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

### கும்பகோணம் :

15—7—56-ல், கும்பகோணத்தில் மோதிலால் தெருவில் தோழர் அர்ச்சுனன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். பி. இராதா, கி மனோகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மும்முனைப் போராட்டத்திலும், இலங்கைத் தமிழர் போராட்டத்திலும் உயிர்நீத்தத் தோழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### சென்னை முத்தமிழ்மன்றம்:

20—7—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, எண் 17, சாலைவிநாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் கா. மு. சீனுவாசன் தலைமையில் நடைபெற்றது. மன்றத் தோழர்களும், தூளை வ. உ. சௌந்தரபாண்டியன் மன்றத் தோழர்களும் பேசினர்.

### பெங்களூர்—இலக்குமணபுரி :

22—7—56 காலை 11 மணியளவில், தோழர் ஆர். முனிசாமி தலைமையில் நடைபெற்றது தோழர்கள் வி. அண்ணாமலை, செ. வெங்கிடசாமி, ஆர். மன்னர், எம். கிருட்ணன், அ. கங்காதரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டத் துவக்கத்தில், போராட்டத்தில் உயிர்நீத்தத் தோழர்களுக்கு அனுதாபமும், மரியாதையும் தெரிவிக்கும் வகையில் 5 நிமிடம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது.

### சென்னை 8-வது வட்டம் :

15—7—56 காலை 9 மணியளவில் சென்னை 8-வது வட்டம் திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் தோழர் சோ. சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். இறுதியில், இலங்கைத் தமிழரைத் துன்புறுத்தும் பண்டாரநாயகா சர்க்காரைக் கண்டித்தும், கலவரத்தில் உயிர்நீத்தத் தோழர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### சென்னை சர்க்கார் உத்திரவு தரும் விளக்கம்

சென்னை, ஜூலை 26—

டபேதார்கள் அந்தஸ்துக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்ட பியூன்களின் சம்பளமானது அதற்கேற்றவாறு நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று முனிசிபல் கமிஷனர்களுக்கும், மாவட்டக் கழகத் தலைவர்களுக்கும் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

பியூன்களின் சம்பள விகிதத்தை விட டபேதார்களின் சம்பள விகிதம் அதிகமென்றும், காரியாலய பியூன்களினுடையதைவிட டபேதார் வேலை 'தன்மை'யில் அதிக முக்கியமானதும் வேறுபட்டதுமாகும் என்றும் சர்க்கார் உத்தரவு குறிப்பிடுகிறது.

### இந்தியாவுக்கு ரஷ்ய இயந்திரக் கலப்பைகள்

புதுடில்லி, ஜூலை 28—

"1954-ம் ஆண்டில், சோவியத்திலிருந்து நான்கு இயந்திரக் கலப்பைகளை (பரீட்சார்த்த நோக்கத்துடன்) இந்தியா வாங்கியது; ஒவ்வொரு கலப்பையின் விலை ரூ. 4,385; அதன் பிறகு 1955-ம் ஆண்டில் ஒரு கலப்பையும், 1956-ம் ஆண்டில் 66 கலப்பைகளையும் நன்கொடையாக இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கியுள்ளது," என்று, மக்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

# என். வி. நடராசன் நூல் நிலையத் திறப்பு விழா

## மீர்சாகிப்பேட்டையில் சி. பி. சிற்றரசு முழக்கம்

சென்னை, ஜூலை 28—

சென்னை 43-வது வட்டப் மீர்சாகிப்பேட்டை தி. மு கழகச்சார்பில் என். வி. நடராசன் நூல் நிலையத் திறப்பு விழாப் பொதுக்கூட்டம், 22-7-56 மாலை 6 மணியளவில் பிள்ளையார்கோவில் திடலில் சிறப்புற நடைபெற்றது.

கிளைக்கழகச் செயலாளர் தோழர் மு. புரட்சிமணி கூட்டத்தினையும், வட்டக்கழகம் நூல் நிலையம் திறப்பதின் முக்கியத்துவத்தையும் விளக்கி, வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்று, தோழர் வே. கன்னியப்பன் அவர்களை கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தித்தருமாறு கேட்டுக்கொண்டார்; தோழர் குப்புசாமி அதனை வழி மொழிந்தார்.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், நூல் நிலையத்தைத் திறந்து வைத்து, அரியதோர் சொற்பெருக்காற்றினர். (அவர் சொற்பொழிவு பின்னர் வரும்)

கூட்டத்திற்கு ஏராளமான தாய்மார் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. தி.)

### நிலைமையில் நெருக்கடி?

புதுடில்லி, ஜூலை 28—

மாநிலச் சீரமைப்பு மசோதாவில், பம்பாய் பிரச்சினை குறித்துத் தங்கள் விருப்பம்போல் வாக்களிக்க அனுமதிக்க வேண்டுமென்று, மக்கள் சபை மகாராஷ்டிர உறுப்பினர்கள் நேருவிடம் கோருவதென உத்தேசித்துள்ளதாகக் கூறப்படுகிறது; இன்றேல், வாக்களிப்புப் பிரச்சினையில், தாங்கள் நடுநிலைமையாவது வகிப்பதற்காவது அனுமதிக்கக் கோருவராம்.

டால்மியா—ஜெயின் நிறுவனங்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு, குழு ஒன்றை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமணங்கள்

15—7—56 காலை 9 மணிக்கு, கல்லக்குடியில் தோழர் ஆர். மாணிக்கம்—தோழியர் சகுந்தலா திருமணம், தோழர் அன்பில் தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துக்களும் வழங்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

15—7—56 காலை 10 மணியளவில், கல்லக்குடியில் தோழர் வரதராசன் — தோழியர் ஆண்டாள் திருமணம் அன்பில் தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சி கருதி ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

13—7—56ல், வெங்கடேசபுரத்தில் தோழர் சங்கரன்—தோழியர் கோவிந்தம்மாள் திருமணம் நடைபெற்றது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது.

20—7—56ல், சிக்கத்தம்பூர் கிராமத்தில், தோழர் சடையாண்டி—தோழியர் கோவிந்தம்மாள் திருமணம் நடைபெற்றதின் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

9—7—56ல், மாயூரம்—நீலவெளியில், தோழர் தங்கராசு—தோழியர் குணவதி திருமணம் தோழர் சி. ஜம்பு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அறிவுடையநம்பி, சீனுவாசன், துரைஅரசன், கே எஸ். சௌந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்; இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது

* * *

15—7—56ல், சென்னை—மயிலாப்பூர், எண் 6 இல்லத்தில் தோழர் ஆர். கே. குருசாமி தலைமையில், தோழர் வெற்றிவேல்—தோழியர் வெள்ளையம்மாள் திருமணம் நடைபெற்றது. தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

18—6—56ல் [illegible] டில் தோழர் முனியப்பன—தோழியர் சிந்தாமணி திருமணம் தோழர் டி. பி. கேசவன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ந. நாச்சியப்பன், ஏ. சின்னப்பா, கி. என். சின்னப்பா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

26—6—56ல், சங்கராபுரத்தில் தோழர் சின்னதம்பி—தோழியர் சின்னம்மாள் திருமணம் தோழர் டி. பி கேசவன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ந. நாச்சியப்பன், இரா. வாசு ஆகியோர் சீர்திருத்த திருமணங்களின் நோக்கத்தை விளக்கியும், மணமக்களை வாழ்த்தியும் சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

29—6—56ல், சோழம்பட்டில் தோழர் முனியப்பன்—தோழியர் வள்ளியம்மை திருமணம் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தலைவரவர்கள் சீர்திருத்தத் திருமணம் பற்றி விளக்கிப் பேசியபின், தோழர்கள் டி. பி. கேசவன், ந. நாச்சியப்பன் ஆகியோரும் பேசினர். சோழம்பட்டு தி. மு. கழகச் சார்பிலும், பெ. கண்ணன், தாசப்பா, சின்னதம்பி ஆகியோர் சார்பிலும் மணமக்களுக்கு வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ.3 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

[நன்கொடைத் தொகைகள் யாவும் வரப்பெற்றோம்—நன்றி— பொறுப்பாளர்.]

தலைமை நிலையச் செய்தி :

# தி. மு. கழகத்தின் பணிக்கு

### இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்

## திரு. வன்னியசிங்கம் எம்.பி. பாராட்டு

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ் நாட்டினர் கொண்டுள்ள கருத்தையும், குறிப்பாக அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளை அறியவும், அதுபோன்று அப்பிரச்சினையின் உண்மை விவரங்களை தமிழ் நாட்டினருக்கு அறிவிக்கவும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வன்னியசிங்கம் அவர்கள், கடந்த 10-தினங்களாகச் சென்னையில் தங்கியிருந்து, முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்களைக் கண்டுபேசும் தமது திட்டத்தின்படி, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களையும் சந்தித்துப்பேசினர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகம் நீண்டகாலமாக ஆற்றிவரும் பணியினையும் கொண்டுள்ள திட்டவட்டமான கொள்கையையும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் வன்னியசிங்கம் மனமாரப் பாராட்டினர்.

மேலும் அவர் தமது எண்ணத்தைத் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழர்கள், பண்டார நாயகா ஆட்சியினரால் அண்மையில் அனுபவித்த கொடுமைகளைச் சுட்டிக்காட்டும் வகையில், தி. மு. கழகம் வெளியிட்ட சுவரொட்டிகளின் மூலம் தமிழக மக்களின் பெரும் அனுதாபத்தைத் தேடித் தந்திருக்கின்றன என்றும், சென்னை கோகலே மண்டபத்தில் தோழர் எச். டி. ராசா எம். பி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் தி. மு. கழகச் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்தினை தோழர் எச். டி. இராசா அவர்கள் மூலம் அறிந்து மிகவும் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைந்ததாகவும், அதுபோன்றே 22—7—56 அன்று சென்னையில் நடைபெற்ற தி. மு. கழக மாபெரும் கூட்டமொன்றில் தாம் கலந்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றமைக்குப் பெருமையும், பூரிப்பும் அடைவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள தி. மு. கழக நிர்வாகிகளும், தோழர்களும் இப்பிரச்சினையில் மிகத் தீவிரமாகவும் மனப்பூர்வமாகவும் தங்களின் பேராதரவைத் தந்து வருவது பாராட்டத்தக்கதாகுமென்றும் திரு. வன்னிய சிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

ஆனல், இங்குள்ள தேசியப் பத்திரிகைகள் இச்செய்திகளை இருட்டடிப்பு செய்து வருவதைக் காணும்போது மிகவும் வேதனைப்படுகிறேன் என்றும் தெரிவித்தார்.

மேலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையின் விவரங்களைப் பற்றி தத்தமது கருத்துக்களைத் தலைவர்கள் தெரிவித்துக்கொண்டனர்.

## இந்தியாவுக்கு நீர்மூழ்கிக் கப்பற்படை?

மக்கள் சபையில் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மக்கள் சபையில், பாதுகாப்பு அமைச்சர் டாக்டர் கே. எஸ். கட்சு சொன்னர் :—

"இந்தியக் கடற்படைக்கு விமானந்தாங்கிக் கப்பல் ஒன்றுவாங்குவதற்கு சர்க்கார் உத்தேசித்திருக்கிறது. தற்போது நீர்மூழ்கிக் கப்பற்படை வைத்துக்கொள்ளும் உத்தேசம் சர்க்காருக்குக் கிடையாது."

அடுத்த இரண்டு ஆண்டுகளில், இந்தியாவைச் சேர்ந்த 700—க்கும் அதிகமான உலோகத் தொழில் நிபுணர்களுக்கு ரஷ்யாவில் பயிற்சியளிக்கப்படுமாம்.

### தி. மு. க.—மாணவர் கிளை

# தேர்தல் நிதி அளிப்பு விழா

★

5—8—56 ஞாயிறு காலை 9 மணிக்கு

## கோகலே மன்றத்தில்

★

# அண்ணா

அவர்கள்

## சொற்பொழிவாற்றுவார்

நன்கொடை : ரூ. 5, 3, 2

# 50,000 ஆலைத் தொழிலாளர்கள் 'போனஸ்' பெற மறுத்துவிட்டனர்

## குறைந்த அளவு விகிதத்திற்கு எதிர்ப்பு

பம்பாய், ஜூலை 29—

பம்பாய் ஆலை முதலாளிகள் சங்கத்தால் 1954-ம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட போனஸ் தொகையை, சுமார் 50,000 ஆலைத் தொழிலாளர்கள் வாங்க மறுத்துள்ளனர்.

பம்பாயில் சுமார் $2\frac{1}{2}$ இலட்சம் ஆலைத் தொழிலாளர்கள்உள்ளனர்.

பம்பாயிலுள்ள மொத்தம் 57 ஆலைகளில் 30 ஆலைகளில் மட்டும் 15 நாட்களுக்கான சம்பளம் போனசாக அளிக்கப்பட்டுள்ளது. இது மிகக் குறைவென தொழிலாளர்கள் தெரிவித்துப் போனஸைப் பெற்றுக்கொள்ள மறுத்தனர்.

தொழிலாளர்கள் 'மெதுவாக வேலை செய்யும்' தந்திரத்தைக் கையாளுவதாகக் கூறி இரு துணி ஆலைகளில் கதவடைப்பு செய்யப்பட்டது. இந்த இரு ஆலைகளிலும் 6,000 தொழிலாளர்கள் உள்ளனர். மற்றொரு ஆலையில் தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்தனர்.

5 ஆண்டு போனஸ் ஒப்பந்தப்படி ஆலை முதலாளிகள் இரண்டு கோடி ரூபாயை $2\frac{1}{2}$ இலட்சம் தொழிலாளருக்குப் போனசாக வழங்க ஒப்புதல் தெரிவித்தனர்; இந்த ஒப்பந்தத்தில், இரு ஆலைகள் மட்டும் சேரவில்லை.

16 ஆலைகளைச் சேர்ந்த 1 இலட்சம் ஊழியருக்கு 3 மாத போனசும், 30 ஆலைகளைச் சேர்ந்த 75,000 தொழிலாளருக்கு 15 நாள் கூலி போனசாகவும் வழங்க முடிவு செய்யப்பட்டது; மீதி மில்கள் 15 தினத்திற்குக் குறையாமல், அதன் சக்திக்கு ஏற்றவாறு போனஸ் தருவதாக அறிவித்தன.

15 நாட்களுக்கான போனஸ் அளிக்கப்பட்ட 30 ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், கடந்த மூன்று நாட்களாக வேலை நிறுத்தம் செய்துள்ளனர். அந்த ஆலைகளைச் சேர்ந்த 50,000 தொழிலாளர்கள் போனஸ் பெற்றுக்கொள்ளவும் மறுத்தனர்.

## தேர்தல் பிரச்சாரம்

### இரயில்வே ஊழியர்கள் பங்கு பெறுவதற்குத் தடை

புதுடில்லி, ஜூலை 29—

சட்டசபைகளுக்கோ, உள்ளாட்சிக் கழகங்களுக்கோ நடைபெறும் தேர்தல்களில் இரயில்வே ஊழியர்கள் பங்குகொள்ளவோ, சில அபேட்சகர்களுக்கு ஆதரவு தேடவோ, தங்கள் செல்வாக்கை உபயோகிக்கவோ கூடாதென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

வாக்குரிமை பெற்றுள்ள இரயில்வே ஊழியர்கள் 'ஓட்' போடலாம்; ஆனல் தாங்கள் யாருக்கு வாக்களிக்கிறார்கள் என்பதையோ, யாருக்கு வாக்குப்பதிவு செய்தார்கள் என்பதையோ வெளியிடக் கூடாது.

இரயில்வே ஊழியர்கள் எந்த தேர்தல் சின்னத்தையும் தங்கள் உடையில் அணிவதும், வீடு, வாகனம் முதலியவற்றில் வைப்பதும் தங்கள் செல்வாக்கை உபயோகிப்பதற்குச் சமமேயாகுமென்று உத்தரவு கூறுகிறது.

# ஆட்சியாளருக்கு ஏ. வி. பி. ஆசைத்தம்பி அறைகூவல்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யன் போன்றவர்களின் படுகொலைகள்! கொஞ்சம் எண்ணிப் பார்த்தால் இது எவ்வளவு அநாகரிகமானது என்பது தெரியும்.

"காங்கிரஸ்காரர்களுக்கு, 'வெள்ளையனே வெளியேறு!' என்று சொல்ல எவ்வளவு உரிமை இருந்ததோ அவ்வளவு உரிமை, 'வடநாட்டு ஆதிக்கம் ஒழிக!' என்று சொல்ல எங்களுக்கும் இருக்கிறது. 'இந்திதான் இந்த நாட்டுப் பொதுமொழி' என்று அவர்கள் வற்புறுத்துவது போலவே, 'தமிழ் ஏன பொதுமொழியாக இருக்கக்கூடாது?'—என்று கேட்க நமக்கும் உரிமை இருக்கிறது.

"வெள்ளைக்காரனை எதிர்த்துக் காங்கிரசார் கிளர்ச்சி செய்வதற்குத் தடையாக யாரும் இருந்ததில்லை. அவர்களின் உப்பு சத்தியாக்கிரகம் கூடாது என்று வேறு எவரும் கூறவில்லை. ஆனல் இந்தி எழுத்தை அழிக்கிறோம் என்று நாம் கிளர்ச்சி நடத்தினல் அதற்கு எதிரான கிளர்ச்சி நடத்துவதற்கு காங்கிரசார் தங்களைத் தயார் படுத்திக் கொள்கிறார்கள். காங்கிரசாரின் கிளர்ச்சிகள் எதற்கும் எதிர்ப்பு இருப்பதில்லை; ஆனல், காங்கிரஸ் எதிர்ப்பாளர்களுக்கு மட்டும் தொல்லையும் எதிர்ப்பும் இருந்துகொண்டே இருக்கிறது. காரணம், காங்கிரசார் ஏராளமான 'ரௌடி'களைத் தங்களோடு வைத்துக் கொண்டிருப்பதுதான்!

"அந்த 'ரௌடிகளின்' திருவிளையாடல்களைத்தான், நமது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக் கொல்ல தேனியில் சதி நடந்தபோதும், மதுரை மாநாடு தீ வைத்துக் கொளுத்தப்பட்டபோதும், மற்றும் பல வேளைகளிலும் நாம் கண்டோம்.

'தொடர்ந்துபாதிக்கப்பட்டவர்களாக நாம் இருந்துவந்திருக்கிறோம்; இப்பொழுது பரவலான முறையில் வளர்ந்துமிருக்கிறோம். நாம் வளர வளர—நமக்கு ஆதரவு பெருகப் பெருக தங்களது ஆதிக்கத்துக்கு வீழ்ச்சி ஏற்பட்டுவிடுமே என்று அவர்கள் பயப்படுவது காரணமாகவே ரௌடித்தனத்தில் அவர்கள் ஈடுபடுகிறார்கள்.

"நாம் எல்லாவற்றையும் படிக்கிறோம்; எவர் சொல்வதிலும் நன்மை இருப்பின் எடுத்துக் கொள்கிறோம்; ஆனல், அவர்கள், தங்கள் தலைவர்கள் தவிர பிறர் சொல்வதைக் கேட்பதுமில்லை—பிறரை அறிஞர்கள் என ஒப்புக்கொள்வதுமில்லை.

"பகுத்தறிவு நமக்கு மிகவும் விருப்பமான ஒரு முறையாக இருக்கிறது; ஆனல், அவர்களோ, அதனை வேம்பாக ஒதுக்குகிறார்கள். நமக்கும் அவர்களுக்குமுள்ள வித்தியாசங்கள் இவைதான்!

"நமது வளர்ச்சி அவர்களுக்கு ஆபத்தின் அடையாளமாகக் காட்சியளிக்கிறது; எனவே, நம்மை 'வகுப்புவாதிகள்—பார்ப்பனத்துவேஷிகள்—நாஸ்திகர்கள்' என்றெல்லாம் சொல்லி மக்களைத் தம் பக்கம் திருப்ப முயற்சித்தனர். ஆனல், நாமோ காங்கிரஸ் வியக்கும் வண்ணம் மிகப் பெரிய அளவில் வளர்ந்தோம்—வளர்ந்து கொண்டேயிருக்கிறோம்.

"அந்த வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில்தான் நாம் தேர்தலில் ஈடுபடுவது என்று திருச்சி மாநாட்டில் முடிவு செய்தோம். அந்த முடிவு காமராசரை கிராமம் தவறாது ஓடச் செய்து, அங்கெல்லாம் அவரை நம்மைப் பற்றிப் பேச வைத்திருக்கிறது.

"காமராசர் அங்கே பேசுவது நமக்கு விசித்திரமாகப்படுகிறது. 'தி. மு. கழகத்திற்குப் பலமில்லை' என்று அவர் எல்லா இடங்களிலும் பேசுகிறார். இப்படி அவர் பேசுவது உண்மையில் அவரது 'பலஹீன'த்தையே காட்டுகிறது.

"தேர்தலில் நிறம்பட வேலை செய்ய இப்பொழுதே தனது வழக்கமான வேலைகளைத் தொடங்கிவிட்டார் காமராசர். இன்றைய நிலையில் அவருக்கு நம்மைத் தவிர வேறு எதிர்ப்பே கிடையாது. பெரியாரோ அவரது ஆதரவாளர்—அதிலும் நம்மை எதிர்ப்பவர். கம்யூனிஸ்டுகள் தாங்கள் இருப்பதாகவே காட்டிக் கொள்வதில்லை. எனவே, நாம் மட்டுமே அவரோடு கோதாவில் இறங்க வேண்டியவர்களாகிவிட்டபடியால் அவர் எங்கு சென்றாலும் நம்மைப்பற்றிப் பேசுவதிலேயே தம் முழுக்கவனத்தையும் செலுத்துகிறார். ஆனல் அவர் பேசுகிற எதுவும் முறையானதாகவோ, விளக்கமானதாகவோ இல்லாமல் விசித்திரமாகவே இருக்கிறது.

'எட்டாண்டு காலக் காங்கிரஸ் ஆட்சியில் நாம் என்ன கண்டோம்? பிச்சைக்காரர்கள் தொல்லை ஒழிந்ததா? தொழிலாளர்கள் வாழ்வு உயர்ந்ததா? 'பிளாட்பார'த்திலே வாழ்கிறவர்கள் எண்ணிக்கையாவது குறைந்ததா? இல்லை என்பதைவிட, முன்பைவிட இப்போது அதிகம் என்பதுதானே பதிலாக இருக்கிறது?

"அதுதான் போகட்டும்; நியாயமாக வரவேண்டிய தேவிகுளம் — பீர்மேடு தமிழ்ப் பகுதிகளாவது வந்ததா? கேவலம் தமிழ்நாடு என்ற பெயராவது வந்ததா? இல்லை என்பதுதானே எல்லாவற்றிற்கும் பதில்! அமைச்சர்கள் சுப்பிரமணியம் சட்டசபையிலும், பக்தவத்சலம் மேல்சபையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றியும் டில்லி சர்க்கார் அலட்சியப்படுத்தி விட்டனரே? இந்த நிலைகண்டு, மராட்டியரான சி. டி. தேஷ்முக்போல ஏன் இவர்கள் ராஜினமா செய்யக்கூடாது?

'தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறக் கூடாது என்று அவர்கள் வேலை செய்கிறார்கள். கழகம் வெற்றி பெறாமல் காங்கிரசே வெற்றி பெற்று வந்தால் உண்மையில் இந்த நாட்டைச் சுடுகாடாகத்தான் நாம் காண நேரிடும்!

"இந்தியாவுக்குப்பின்னர் விடுதலை பெற்ற சீனு மிகவும் முன்னேறிவிட்டது நாம் முன்னேற முடியாததற்குக் காரணம் வடநாட்டு ஆதிக்கமும், அவர்களுக்கு வக்காலத்து வாங்குகிற 'விபிஷணர்'களது ஆட்சியும்தான். எனவேதான் இரண்டும் ஒழிய நாம் சட்டசபைக்குச் செல்ல முடிவு செய்துள்ளோம்.

"தேர்தலில் வெற்றி முக்கியமல்ல; எதிர்க்கிறோம் என்பதே முக்கியம் தோல்விபற்றிய கவலையும் நமக்கில்லை

"பொதுத் தேர்தலில் பொதுமக்கள் கழகத்திற்கு முழு ஆதரவையும் தரவேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

### வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள்

மூன்று தொகுதிகளுக்கு கால வரம்பு நீடிப்பு

சென்னை, ஜூலை 28—

சென்னை மாவட்டத்தில், பாபநாசம் (தஞ்சை மாவட்டம்); திருமயம் (திருச்சி மாவட்டம்); உத்தமபாளையம் (மதுரை மாவட்டம்) ஆகிய மூன்று தொகுதிகள் சம்பந்தப்பட்ட வாக்காளர் பட்டியல் பிரச்சினையில், ஆட்சேபணைகள் முதலியன சமர்ப்பிப்பதற்கான காலவரம்பை, 1956 ஆகஸ்டு 20-ந் தேதி வரையில் தேர்தல் குழு நீடித்திருக்கிறது.

### 3,20,000 அகதிகளாம்!

கல்கத்தா, ஜூலை 28—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக ஓடிவந்த 3,20,000 பேர் மேற்கு வங்கத்தின் பல்வேறு அகதிகள் முகாமில் இருந்து வருவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.